சுருக்கம்

மகளிர் நலம்– திருமண நிதியுதவி– ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் நிதியுதவி திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவி திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற மகளிர் திருமண நிதியுதவி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி தொகை 20,000 /– ரூபாயாக உயர்த்தப்படுதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் (ம) சத்துணவு திட்டத் (சந 3) துறை

அரசாணை ( 2டி) எண். 59 நாள் 20– 11–2008

திருவள்ளுவர் ஆண்டு 2039
கார்த்திகை திங்கள் 5ம் நாள்

படிக்க

1. அரசாணை (நிலை) எண் . 462. சமூகநலத் துறை, நாள் 24–6–1975
2. அரசாணை (நிலை) எண் . 673. சமூகநலத் துறை, நாள் 20–2–1982
3. அரசாணை (நிலை) எண் .807. சமூகநலத் துறை, நாள் 23–3–1985
4. அரசாணை (நிலை) எண் . 121. சமூகநலத் துறை, நாள் 15–6–1999
5. அரசாணை (நிலை) எண் . 131. சமூகநலம் (ம) சத்துணவு திட்டத் துறை, நாள் 3–8–2007
6. அரசாணை (நிலை) எண் . 132, சமூகநலம் (ம) சத்துணவு திட்டத் துறை நாள் 3–8–2007
7. அரசாணை (நிலை) எண் . 169, சமூகநலம் (ம) சத்துணவு திட்டத் துறை நாள் 21–9–2007
8. அரசாணை ( 2டி) எண் . 37, சமூகநலம் (ம) சத்துணவு திட்டத் துறை நாள் 3–6–2008

மீண்டும் படிக்க

9. சமூகநல ஆணையரின் கடித எண். 15721/மந (1) /2008 நாள் 11–6–2008
10. சமூகநல ஆணையரின் கடித எண். 26394/மந (1) /2008 நாள் 11–6–2008
11. சமூகநல ஆணையரின் கடித எண். 26395/மந (1) /2008 நாள் 11–6–2008

––––

**ஆணை**

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளித்து ஊக்குவிக்கும் வகையிலும் கணவர் மனைவி இருவருக்கும் நிதியுதவி வழங்கிடும் வகையிலும் பார்வை 1ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணையின்படி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தொகை 10,000/– ரூபாயினை,

15,000/– ரூபாயாக (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி பார்வை 6ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணையின்படி அறிமுகப்படுத்தப் பட்ட அன்னை தெரசா நினைவு ஆதரவற்றோர் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த திருமண நிதியுதவித் தொகை 1,000/– ரூபாய் பல்வேறு காலக்கட்டங்களில் உயர்த்தப்பட்டு, ரூபாய் 10,000–ஆக இருந்து 15,000/– ரூபாயாக உயர்த்தி பார்வை 5ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

3. பார்வை 3ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையின்படி ஏழை விதவை பெண்ணின் மகளின் திருமணத்திற்கு நிதியுதவி வழங்கிடும் வகையில் ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம் 1981–82ல் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவி திட்டமென பார்வை 4ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் நிதியுதவியாக 1,000/– ரூபாயாக வழங்கப்பட்டு, பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டு, பார்வை 7ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையின்படி 15,000/– ரூபாயாக உயர்த்தி ஆணையிடப்பட்டு வழங்கப்படுகிறது.

4. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தொகையான 15,000/– ரூபாயே இதர திருமண நிதியுதவித் திட்ட பயனாளிகளுக்கும் நிதியுதவி தொகையாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 2008–09ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்ட நிதி உதவித் தொகை மட்டும் அதிகப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டு நிதியுதவித் தொகையும் 20,000/– ரூபாயாக ஆக உயர்த்தி வழங்க பார்வை 8ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே இதர திருமண நிதியுதவித் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி தொகையினையும் அதே அளவிற்கு உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகிறது என பார்வை 9 முதல் 11ல் படிக்கப்பட்டுள்ள கடிதங்களில் சமூகநல ஆணையர் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற மகளிர் திருமண நிதியுதவி திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண திட்டம் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வரும் நிதியுதவி தொகையினையும் 20,000/– ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிக்குமாறு சமூகநல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. சமூகநல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆராய்ந்து, அதனை ஏற்றுக் கீழ்க்கண்ட ஆணைகள் வெளியிடுகிறது.

1) அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற மகளிர் திருமண நிதியுதவி திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவி திட்டம் மற்றும் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி தொகையினை 15,000/–

ரூபாயிலிருந்து உயர்த்தி 20,000/– ரூபாயாக (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

2) பயனாளிகள் அரசின் திருமண நிதியுதவி திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் தான் பயன்பெற முடியும்.

6. மேலே பத்தி 5(1)ல் கண்டுள்ள திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவி தொகை உயர்த்தப்பட்டதன் காரணமாக 2008–09ம் நிதியாண்டில் உடனடியாக செயல்படுத்தபடுவதாலும் ஏற்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.98.40 இலட்சம் (ரூபாய் தொன்னூற்று எட்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இச்செலவினம் ''புதுதுணைப் பணி குறித்த செலவினம் (New Instrument of Service) சட்டப் பேரவையின் ஒப்புதல் உரிய காலத்தில் பெறப்படும். முதற்கண் இச்செலவினம் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுதல் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை அரசின் நிதி (வ.செ–1) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். முன்பணம் பெற உரிய படிவத்துடன், இவ்வரசாணையின் நகலுடன் அரசு நிதி (வ.செ–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு சமூக நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

" 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 103 மகளிர் நலன் – பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II. மாநிலத் திட்டம் – KC வறிய நிலையில் உள்ள விதவையரின் மகள்களின் திருமண நிதியுதவி – 09. உதவி மானியங்கள் – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்"
(த.தொ.கு.எண்.2235–02–103–KC 0938)

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன் – 789 – ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுத் திட்டம் – JH. வறிய நிலையில் உள்ள விதவையரின் மகள்களின் திருமண நிதியுதவி –09 உதவி மானியங்கள் –03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்"
(த.தொ.கு.எண்.2235–02–789–JH 0937)

:2235. சமூகப் பாதுகாப்பும் மற்றும் நலனும் – 02. சமூகநலம்– 103. மகளிர் நலம்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II –மாநிலத் திட்டம் – JN. விதவை மறு திருமணத்தை ஊக்குவிக்க சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம்–09– உதவி மானியங்கள் – 03.குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்".
(த.தொ.கு.எண். 2235 -02-103-JN-0937)"

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும்– 02 –சமூகநலன்–103 மகளிர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநில திட்டம்– KH– அனாதைப் பெண்களுக்குத் திருமண உதவி–09–உதவி மானியங்கள்–
03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்''
(த.தொ.கு.எண்.2235–02–103–KH–0938)

2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும்– 02 –சமூகநலன்–789 ஆதிதிராவிடருக்கான சிறப்புக் கூறுத் திட்டம்– JL– சிறப்பு கூறு திட்டத்தின் கீழ் அனாதைப் பெண்களுக்குத் திருமண உதவி–09–உதவி மானியங்கள்– 03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்''
(து.தொ.கு.எண்.2235–02–789–JL-0939)

6. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.72059/நிதி (சந)/2008, நாள் 19–11–2008 இசைவு மற்றும் கூடுதல் பேரேடு எண்.ரூ.1274 (ஆயிரத்து இருநூற்று எழுபத்து நான்கு)

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

சமூகநல ஆணையர், சென்னை–5
மாநில தலைமைக் கணக்காளர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35/1.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும்
அனைத்து மாவட்ட சமூகநல அலுவலர்கள்,
(சமூகநல இயக்குநர் வழியாக)
அனைத்து கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமை கணக்காயர் (துணி II), சென்னை–18.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18

நகல்

நிதித் (சந) (வ.செ.பொ I/II) துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2 பிரிவு) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–9
மாண்புமிகு சமூக நல அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9
இருப்புக்கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்